**2020–ம் ஆண்டு மே மாதம் 29–ஆம் தேதி (29.05.2020) வெள்ளிக் கிழமை காலை 10.15 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட கூட்ட நடவடிக்கைகள்.**

1. ஈரோடு மாநகரம் ஸ்மார்ட் சிட்டியாக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் Providing Under Ground Sewerage System to Smart City Area phase II in Erode City Municipal Corporation பணியை ஈரோடு ஸ்மார்ட் திட்டத்தின் கீழ் ரூ.40.66 கோடி மதிப்பில் மேற்கொள்ள பதினொன்றாவது உயர்ஆற்றல்மிக்க திட்ட ஒப்புதல்குழு கூட்டம் நாள் 04.12.2019 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது . மேலும் மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் ந.க.எண்.493/2019-20(Roc.No.32451/2019/DO1) நாள்: 07.01.2020-ல் 4200.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு E-Tendering மற்றும் மூடி முத்திரையிட்ட முறையில் இரு உறை அமைப்பில் 26.02.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறுஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது..

1. M/s.Anchor Ceramics co (p) Ltd ,Chennai,
2. M/s. Subaya Constructions Co Ltd

வரப்பெற்ற தகுதிவாய்ந்த இரண்டு ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகையை வழங்கியுள்ளார்கள். மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை 19.03.2020 அன்று நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை தொழில்நுட்ப நிலைக் குழுவில் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விலைப்புள்ளிகளை 23.03.2020-அன்று மதியம் 3.00 மணிக்கு திறக்கப்பட்டதில், பெறப்பட்ட விலைவிகிதங்களை அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது பெறப்பட்ட விபரம் கீழ்க்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1 | M/s.Anchor Ceramics co (p) Ltd ,Chennai | (+) 12.21 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | M/s.Subaya Constructions Co Ltd , | (+) 41.79 சதவீதம் அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (+) 12.21 சதவீதம் அதிகமானதாகவும் உள்ள M/s.Anchor Ceramics co (p) Ltd ,Chennai நிறுவனத்தாரிடம், மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்குமாறு இவ்வலுவலக முதலாம் கேட்பு அறிவிப்பு கடிதம் எண் இ1/7737/2019 நாள்.23.03.2020-ல் கொடுக்கப்பட்டது. மேற்படி ஒப்பந்ததாரர் COVID -19 முழு அடைப்பு ஊரடங்கு காரணமாக தங்களது 22.05.2020 தேதிய கடிதத்தில் (+) 12.21% லிருந்து (+) 11.09% ஆக விலைவிகதத்தினை குறைத்து வழங்கியுள்ளர்கள்.

இக்குழு இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை செய்ய தீர்மானிக்கப்பட்டு விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் ஏற்கனவே வழங்கப்பட்ட (+) 11.09% அதிகமான விலைவிகிதத்தைக் குறைத்து (+) 9.96% விலைவிகிதத்தில் இப்பணியை மேற்கொள்ள M/s.Anchor Ceramics co (p) Ltd ,Chennai நிறுவனத்தாரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை நகராட்சி நிர்வாக ஆணையரக ஒப்பந்தப்புள்ளி இறுதி

செய்யும் குழுவின் (Tender Award Comittee) ஒப்புதல் பெற்று பணியை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணி திட்டப்பணியாக உள்ளதால் பணியின் அவசர அவசியத்தைக் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3. மேலும் அனுமதிக்கப்பட்ட தொகையை விட கூடுதல் செலவினத் தொகையையும் ஸ்மார்ட் சிட்டி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(E1/7737/2019)

**52. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

2. ஈரோடுமாநகராட்சிமண்டலம்-4க்குட்பட்ட வார்டுஎண் 52 கள்ளியங்காடு பகுதியில் உள்ள PVC டேங்க், பாலசுப்ராயலுவீதி தொடக்கப்பள்ளியில் PVC டேங்க், வார்டு எண்.54 மொய்தீன் வீதி உள்ள PVC டேங்க், வார்டு எண்.55 அன்னைமேரி பள்ளி அருகில் உள்ள PVC டேங்க் மற்றும் வார்டு எண்.58 வண்டியூரான் கோவில் வீதியில் உள்ளPVC டேங்க் ஆகியவை அமைக்கப்பட்டு பல வருடங்கள் ஆகிவிட்டபடியால் வெய்யில் மற்றும் மழையின் காலமாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகள் காரணமாக PVC தொட்டி உடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. மேலும் இந்ததொட்டியின் மூலம் மேற்கண்ட பகுதிகளுக்கு ஆழ்துளை குழாய் கிணற்றுநீர் விநியோகம் பாதிப்படைந்துள்ளது. இதனால் இப்பகுதி பொதுமக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். எனவே உடைந்த மற்றும் பழுந்தடைந்த PVC டேங்கை அகற்றிவிட்டு புதிதாக PVC டேங்க் வாங்கி பொருத்தி குடிநீர் விநியோகம் மேற்கொள்ளவும், உத்தேசசெலவினத்தொகை ரூ.1.40 இலட்சத்திற்கு 07.02.2020-ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ள உத்தேசப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.V.தாமோதரன், ஈரோடுஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்துமுடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,39,969/-ஐ திரு.V.தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்க்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E2/ 555/ 2020)

**53. பதிவு செய்யப்பட்டது.**

3. ஈரோடு மாநகராட்சி மண்டலம்-4க்குட்பட்ட சோலார் நாய்கள் கருத்தடை மையம் அருகில் கட்டிடக் கழிவுகள் மற்றும் மின், மின்னுன கழிவுகள் கொட்டுவதற்கு ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்கள் செல்லும் பாதை குண்டும் குழியுமாக உள்ளதாலும், முட்புதர்கள் அதிகம் வளர்ந்து பாதையில் வாகனங்கள் செல்ல முடியாமல் உள்ளது. எனவே மேற்கண்ட பகுதிகளில் சாலைகளில் குண்டும் குழியுமாக உள்ள மண் குவியல்களை JCB இயந்திரம் மற்றும் பொக்லைன் இயந்திரம் மூலம் சமன்படுத்தி சாலைகளை மேற்படி கழிவுகளை கொண்டுவரும் வாகனங்களுக்கு ஏதுவாக பாதை அமைத்து தருமாறும் கழிவுகளை கொட்டுவதற்கு இடத்தினை சமன்படுத்தி போக்குவரத்திற்கு ஏதுவாகபாதையை சரிசெய்ய உள்ளூர் விலைவிகித்தின் அடிப்படையில் பணியினை செய்யஅனுமதியும் அதற்காக ஆகும் உத்தேச செலவினம் ரூ.0.72 இலட்சத்திற்கு 12.03.2020-ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ள உத்தேசப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கியதிரு.V.தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.71,792/-ஐ திரு.V.தாமோதரன்,

ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

பார்வையிட்டுபதிவுசெய்யலாம். (E2/ 0586/ 2020)

54. பதிவு செய்யப்பட்டது.

4. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–1க்குட்பட்ட பகுதியில் வார்டு எண். 6 மற்றும் 7 பி.பெ.அக்ரகாரம் 5 லட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் அன்னை சத்யா நகர் பகுதிகளில் உள்ள 2 லட்சம் லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் பிரதான வால்வு மற்றும் குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள வால்வுகள் அமைக்கப்பட்டு பல ஆண்டுகளாக பயன்பாட்டில் இருந்து, தற்பொழுது பழுது ஏற்பட்டு குடிநீர் சீரான முறையில் வழங்க இயலவில்லை. மேலும், தற்போது கோடை காலமாக இருப்பதால் பொதுமக்கள் குடிநீர் இன்றி மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, பொதுமக்களின் நலன் கருதி பழுதடைந்துள்ள 4”, 5” & 8” சுலிஸ் வால்வுகளை அப்புறப்படுத்தி, புதிய வால்வுகள் பொருத்தி குடிநீர் விநியோகம் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2,20,000/– க்கு 20.04.2020ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.219669/-ஐ திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E2/ 0621/ 2020)

55. பதிவு செய்யப்பட்டது.

5. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண். 60 வெண்டிபாளையம் குப்பைகிகிடங்கில் அனைத்து மண்டலங்களில் இருந்து சேகரமாகும் குப்பைகள் மாநகராட்சி வாகனங்கள் மூலம் தினமும் கொட்டப்பட்டு வருகிறது. மேலும், தற்போது கோடை காலம் என்பதால் குப்பை குவியல்களில் இருந்து வெளிவரும் மீத்தேன் வாயுவால் அதிக வெப்பத்தின் காரணமாக குப்பை குவியல்களில் அடிக்கடி தீ பற்றி எரிகிறது. இதனால் குப்பை கிடங்கை சுற்றியும் கரும்புகை எழும்புவதுடன், காற்றும் அதிகளவில் மாசு ஏற்பட்டு அருகிலுள்ள பொதுமக்களும் மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே, தற்போது கோடை காலத்தில் உண்டாகும் தீயை அணைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் தீயனைப்பு உபகரணங்கள் பழுது ஏற்பட்டு உள்ளதால், பெரும்பான்மையான இடங்களில் தீ பிடிக்கும் போது தீயை அனைப்பதில் சிரமமும், காலதாமதமும் ஏற்படுகிறது. எனவே, தீயை அனைக்க தேவையான உபகரணங்கள் வாங்கி பொருத்த தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.56 இலட்சத்திற்கு 04.02.2020 அன்று ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.555401/-ஐ திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E2/ 0244/ 2020)

56. பதிவு செய்யப்பட்டது.

6. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண். 60 க்குட்பட்ட வெண்டிபாளையம் குப்பை கிடங்கில் மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலிருந்து சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் தினந்தோறும் லாரிகள், டிராக்டர்கள் மூலம் கொண்டுவரப்படுகிறது. மேலும் கொட்டப்பட்டுள்ள பழைய குப்பைகளை சமப்படுத்துவதற்கும், குவியல்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்த மாநகராட்சிக்கு சொந்தமான JS140 Poclain இயந்திரம் பழுது ஏற்பட்டு பயன்படுத்த முடியாமல் உள்ளது. தற்போது வார்டுகளிலிருந்து குப்பைகனை கொண்டுவரும் மாநகராட்சி வாகனங்கள் குப்பைகிடங்கின் உட்பகுதிக்கு சென்று மேலும், குப்பைகளை கொட்ட சேரும், சகதியுமாக உள்ளதால் உள்ளே செல்ல முடியாமல் இருந்தது. பணிகளை செய்வதற்கு வாடகை அடிப்படையில் JS140 Poclain இயந்திரம் பயன்படுத்தி குப்பைகளை சமன் செய்தவற்கும் மாநகராட்சி குப்பை ஏற்றிவரும் வாகனங்கள் செல்ல ஏதுவாக பாதையை சரி செய்வதற்கும் உத்தேச செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு 31.01.2020ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.989408/-ஐ திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (H1/556/ 2020)

**57. பதிவு செய்யப்பட்டது.**

7. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4 வார்டு எண். 10 காவேரி ரோடு, நடராஜன் வீதி சந்திப்பில் 350 mm விட்டமுள்ள AC பம்பிங் மெயின் குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளது மற்றும் அக்ரஹாரம் OHT மெயின் வால்வு பழுது ஏற்பட்டுள்ளதால் காவேரி ஆற்றிலிருந்து மண்டலம்–1,2 மற்றும் 3க்குட்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் சீரான முறையில் வழங்க இயலவில்லை. எனவே, மேற்காணும் 350mm விட்டமுள்ள AC பம்பிங் மெயின் குழாய் மற்றும் 200 mm சுலீஸ் வால்வு பழுதுகளை சரிசெய்து குடிநீர் விநியோகம் மேற்கொளளவும், உத்தேச செலவினத் தொகை ரூ.94,000/–க்கு 07.02.2020ல் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.93100/-ஐ திரு. V.தாமோதரன், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E2/778/ 2020)

**58. பதிவு செய்யப்பட்டது.**

8. ஈரோடு மாநகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் சுற்றுலாத்துறை மூலம் 20 இடங்களில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட உயர் கோபுர மின் விளக்குகளில் 11 எண்ணிக்கை மாநில நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் உள்ள சாலை சந்திப்புகளிலும், 2 எண்ணிக்கை ஈரோடு வெளி வட்ட சுற்றுச்சாலை சந்திப்புகளிலும் மற்றும் 7 எண்ணிக்கை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள இடங்களிலும் அமைக்கப்படுகிறது.

மாநில நெடுஞ்காலைத்துறையின் பராமரிப்பில் உள்ள சாலை சந்திப்புகளில் அமைக்கப்படவுள்ள 11 எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்குகள் மற்றும் ஈரோடு வெளி வட்ட சுற்றுச்சாலை சந்திப்புகளில் அமைக்கபடவுள்ள 2 எண்ணிக்கை உயர்கோபுர மின் விளக்குகள் ஆகியவற்றை அமைக்க அனுமதி வழங்க கோரி விண்ணப்பிக்கப்ட்டதில் சாலை சீரமைப்பு கட்டணமாக கீழ்கண்ட விபரப்படி செலுத்த கோரப்பட்டுள்ளது.

| வ.எண் | உயர்கோபுர மின் விளக்கு அமைக்கப்படும் சாலை விபரம் | செலுத்தக்கூறப்பட்டுள்ள சாலை சீரமைப்பு கட்டணம் (ரூ) |
|---|---|---|
| 1 | மாநில நெடுஞ்சாலை துறையின் பராமரிப்பில் உள்ள 8 எண்ணிக்கை உயர்கோபுர மின்விளக்கு<br>DE, Highways, Erode Lr.No.352/2020/இவஅ1/நாள்.31.01.2020 | 1,95,000.00 |
| 2 | ஈரோடு வெளி வட்ட சுற்றுச்சாலை சந்திப்புகளில் அமைக்கப்படவுள்ள 2 எண்ணிக்கை உயர்கோபுர மின் விளக்குகள்<br>DE, Highways, Scheme, Salem Lr.No.137/ EDRR(K.9/2&10/8/வஅ.நாள்.18.03.2020 | 39,000.00 |

எனவே மேற்கண்டவாறு உயர் கோபுர மின் விளக்கு அமைக்கப்பட சாலை சீரமைப்பு கட்டணத்தினை நெடுஞ்சாலைததுறையினருக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நெடுஞ்சாலைத்துறைக்கு சாலை சீரமைப்பு கட்டணம் செலுத்தியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(E1/444/2017)

**59.** அ.கு அனுமதிக்கப்பட்டது.

9. ஈரோடு மாநகராட்சி- R.K.V சாலையில் செயல்பட்டு வந்த தினசரி காய்கறி மார்க்கெட் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக பொதுமக்களுக்கிடையே சமூக இடைவெளி ஏற்படுத்தும் பொருட்டு ஈரோடு பேருந்து நிலையத்திற்க்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் காந்திஜி சாலையில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் உழவர் சந்தையினை இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சி அலுவலகத்தில் வாகனங்களில் கிருமி நாசினி திரவங்கள் வாகனங்களில் நிரப்பப்பட்டு மாநகராட்சிக்குட்பட்டு பகுதிகளில் தெளிக்கப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட இடங்களில் கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு தேவையான மின்சார வயரிங் மற்றும் குழாய்களை பொருத்தும் பணிகளை ரூ.90,000/– உத்தேச செலவில் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகளின் சட்டம் பிரிவு-15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.85514/-ஐ வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E1/1919/2020)

**60. அ.கு அனுமதிக்கப்பட்டது/பதிவு செய்யப்பட்டது.**

10. ஈரோடு மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியில் கிருமி நாசினி தெளிப்பு பணியில் ஈடுபட்டு வந்த தீயணைப்புதுறை வாகனத்தின் Jetting பம்பின் பழுது ஏற்பட்டதால் பழுதினை உடனடியாக ரூ.30,000/- உத்தேச செலவில் சரிசெய்ய பணியின் அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s.Guru Electrical Works, Erode, அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.29,624/-ஐ M/s.Guru Electrical Works, Erode, அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E1/1950/2020)

**61. பதிவு செய்யப்பட்டது.**

11. ஈரோடு மாநகராட்சியில் கொரோனா தடுப்பு பணிக்கு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்க நான்கு எண்ணிக்கை வாகனங்களில் பொருத்த Petrol Engine with Portable Power Sprayer Set -கள் நான்கு எண்ணிக்கை வாங்குவதற்கு பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. மேலும் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s.Kavish Agro Farm

Equipments, Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி Petrol Engine with Portable Power Sprayer Set -கள் வாங்கப்பட்டு வாகனங்களில் பொருத்தப்பட்டன. எனவே மேற்கண்ட Petrol Engine with Portable Power Sprayer Set -களை விநியோகம் செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.1,97,120/-ஐ M/s.Kavish Agro Farm Equipments, Erode அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். (E1/1910-1/2020)

**62. பதிவு செய்யப்பட்டது.**

**12.** ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் பொது.ந.க.எண்.**இ7/8647/2018**, நாள்.**11.03.2020**–ல், சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வரும் திரு.தி.திருநாவுக்கரசு என்பவர் **25.05.2010** அன்று பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார் எனவும், அரசாணை எண்.**303**, நிதி (ஊதியக்குழு) நாள்.**11.10.2017**–ன்படி தனியரின் ஊதிய விகிதம் ரூ.**35400/–1,12,400/–** ஆகும் எனவும், சுகாதார ஆய்வாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட்டு பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது எனவும், அன்னாரின் குடும்ப சூழ்நிலை காரணமாக பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து ஈரோடு மாநகராட்சிக்கு ஒருவழி பணி மாறுதலில் ஈர்த்துக்கொள்வது தொடர்பாக, தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அன்னாரின் விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேலும் அன்னாரை ஈரோடு மாநகராட்சிக்கு ஒரு வழி பணிமாறுதலில் செல்வதற்கு சிறப்பு அதிகாரி–மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. திரு.தி.திருநாவுக்கரசு, சுகாதார ஆய்வாளர் என்பவரின் குடும்ப சூழ்நிலை காரணமாக ஈரோடு மாநகராட்சியில் துப்புரவு ஆய்வாளராக பணியிட மாறுதல் செய்வது குறித்து வரப்பெற்றுள்ள ஆணையாளர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் பொது.ந.க.எண்.**இ7/8647/2018**, நாள்.**11.03.2020** மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி மன்ற தீர்மானம் எண்.**073/2020**, நாள்.**28.01.2020** ஆகியவை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-**

ஈரோடு மாநகராட்சியில் **01.04.2020** ஆம் தேதி முதல் காலியாகவுள்ள துப்புரவு ஆய்வர் பணியிடத்தில் திரு.தி.திருநாவுக்கரசு என்பவரை ஈர்த்துக்கொள்ள அனுமதிக்கலாம்.

**(எச்2/1739/2020)**

**63. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**13.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகள் ந.க.எண்.**5437/2020–6**/J2, நாள்.**24.03.2020** மற்றும் ந.க.எண்.**5437/2020–8**/J2, நாள்.**31.03.2020** ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பீளிச்சிங் பவுடர் மற்றும் சுண்ணாம்பு தூள் ஆகியவற்றை பயன்படுத்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு **15–**ன்கீழ் பீளிச்சிங் பவுடர் **50** மெட்ரிக் டன் மற்றும் சுண்ணாம்பு தூள் **100** மெட்ரிக் டன் ஆகியவற்றை கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் பாலாஜி ட்ரேடர்ஸின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.**32,89,818/–**ஐ வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(எச்2/2000/2020)

64. பதிவு செய்யப்பட்டது.

**14.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகள் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 மற்றும் ந.க.எண்.5437/2020–10/J1, நாள்.09.04.2020 ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக பணியில் ஈடுபடும் துப்புரவு பணியாளர் அனைவரும் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் பாதுகாப்பு உபகாரணங்கள் கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திருவாளர்கள் கே.என்.பிரசன்னா ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.46,09,944/–ஐ வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்2/1990/2020)

65. பதிவு செய்யப்பட்டது.

**15.** நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைகள் ந.க.எண்.5437/2020–6/J2, நாள்.24.03.2020 மற்றும் ந.க.எண்.5437/2020–16/J2, நாள்.21.04.2020 ஆம் தேதிய அறிவுரைகளில், மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசினிகளை பயன்படுத்தி பணிகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் அவசர அவசியம் கருதியும், நிர்வாக நலன் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணியின் முக்கியத்துவம் கருதியும் ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15–ன்கீழ் கிருமி நாசினிகளை 180 மில்லி பாட்டில் 5555 எண்ணிக்கைகள் (Hand Sanitizer) கொள்முதல் செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி வழங்கிய M/S.S.P.Y. அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் லிமிடெடின் விலைப்புள்ளியை ஏற்று, மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை ரூ.3,99,960/–ஐ வழங்கியதை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பார்வையிட்டு பதிவு செய்யலாம். (எச்2/2194/2020)

66. பதிவு செய்யப்பட்டது.

**16.** ஈரோடு மாநகராட்சியின் நேதாஜி தினசரி மார்கெட்டில் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையான சமூக இடைவெளி பின்பற்ற இயலாத சூழ்நிலை உள்ள காரணத்தால் அவசர அவசியம் கருதி தற்காலிகாக **24.03.2020** முதல் மேட்டூர் சாலையில் உள்ள மத்திய பேருந்து நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு தினசரி சந்தை நடைபெற்று வருகிறது. கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் காலங்களில் அரசு உத்தரவுப்படி பேருந்துகள் இயங்குவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தற்போது பேருந்துகள் இயக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், தற்காலிகமாக பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் தினசரி சந்தையை (நேதாஜி மார்க்கெட்) வி.சி.டி.வி. சாலையில் உள்ள வ.உ.சி. பூங்கா மைதானத்திற்கு மாற்றம் செய்வதற்கும் அதில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:—

மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்று வரும் தினசரி மார்கெட்டை கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கையின் காரணமாக அவசர அவசியம் கருதி வி.சி.டி.வி. சாலையில் உள்ள வ.உ.சி. பூங்கா மைதானத்திற்கு மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/193/2020

**67. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**17.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலைய வணிக வளாக முதல்தள மேற்குபுறக் கடை எண். 11—ன் (வ.வி.எண். 056/78222) குத்தகைதாரரான திரு. எஸ். கொற்றவேல் தனது **25.04.2020**—ம் தேதிய கடிதத்தில் மேற்படி குத்தகைக்குரிய கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துள்ளார்.

எனவே மேற்படியாரின் குத்தகை உரிமத்தை **30.04.2020** உடன் ரத்து செய்யவும், கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றபின் மேற்படி குத்தகையினத்திற்கான பொது ஏல நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும், மாமன்ற தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு —

அ) பேருந்து நிலைய வணிக வளாக முதல்தள மேற்குபுறக் கடை எண். 11—ஐ குத்தகைதாரர் இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால், மாமன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று திரு. எஸ். கொற்றவேல் குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்தமைக்கு அனுமதி வழங்கலாம். ஏலம் குறைவாக கோரப்பட்டால் மேற்படி ஒப்பந்த காலத்திற்குண்டான வாடகை இழப்பினை அன்னாரின் வைப்புத் தொகையில் ஈடு செய்து கொள்ளலாம்.

ஆ) கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றபின், மேற்படி குத்தகையினத்திற்கான பொது ஏல நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கலாம்.

இ) மேற்படி பணிகளை ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அலுவலக நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**68. அ.கு அனுமதிக்கப்பட்டது.**

**18.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட காமராஜ் சாலை வணிக வளாக தரைத்தளக் கடை எண். **8–**ன் (வ.வி.எண். **056/BD01/00594**) குத்தகைதாரரான திரு. ஏ.ஜி. சக்திசுப்பிரமணி தனது **05.05.2020–**ம் தேதிய கடிதத்தில் மேற்படி குத்தகைக்குரிய கடையினை மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துள்ளார்.

மேலும் பேருந்து நிலைய வணிக வளாக முதல்தள மேற்குபுறக் கடை எண். **16–**ன் (வ.வி.எண். **056/BD01/00030**) குத்தகைதாரரான திரு. சி.இ. ரஞ்சித்குமார் தனது **20.05.2020–**ம் தேதிய கடிதத்தில் மேற்படி குத்தகைக்குரிய கடையினை தொடர்ந்து நடத்த இயலாததால் மாநகராட்சி வசம் திரும்ப ஒப்படைத்துள்ளார்.

எனவே மேற்படியாரின் குத்தகை உரிமத்தை **31.05.2020** உடன் ரத்து செய்யவும், கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றபின் மேற்படி குத்தகையினத்திற்கான பொது ஏல நடவடிக்கையினை மேற்கொள்வதற்கும் மாமன்ற தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

அ) காமராஜ் சாலை வணிக வளாக தரைத்தளக் கடை எண். **8** மற்றும் பேருந்து நிலைய வணிக வளாக முதல்தள மேற்குபுறக் கடை எண். **16** ஆகியவற்றின் குத்தகைதாரர்கள் தொடர்ந்து நடத்த இயலாது என இம்மாநகராட்சி வசம் ஒப்படைத்ததால், **31.05.2020** உடன் குத்தகைதாரருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை ரத்து செய்வதற்கு அனுமதி வழங்கலாம்.

ஆ) கொரோனா வைரஸ் தொற்று பரவுதல் தடுப்பு நடவடிக்கைகள் முடிவுற்றபின், மேற்படி குத்தகையினத்திற்கான பொது ஏல நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண். அ1/982/2017

**69.** **அ.கு அனுமதிக்கப்பட்டது. மறுஏலம் விடுவதால் நிதியிழப்பு ஏதும் ஏற்படின் அன்னாரின் வைப்புத் தொகையில் ஈடுசெய்யலாம்.**

19. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-2க்குட்பட்ட VOC Park அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,21,167/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/607/2020)**

**70.     பதிவு செய்யப்பட்டது.**

20. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-2க்குட்பட்ட வார்டு 17-ல் சூளை அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,27,332/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/605/2020)**

**71.     பதிவு செய்யப்பட்டது.**

21. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-3க்குட்பட்ட வார்டு 45-ல் காந்திஜி ரோடு அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,06,178/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1962/2020–3)**

72. **பதிவு செய்யப்பட்டது.**

22. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-3க்குட்பட்ட வார்டு 43-ல் அரசு தலைமை மருத்துவமனைஅம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்ப்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.1,77,206/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1962/2020–3)**

73. **பதிவு செய்யப்பட்டது.**

23. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-2க்குட்பட்ட வார்டு 26-ல் நாச்சியப்பா வீதி அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்ப்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்ப்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து முடிக்க உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,23,806/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/606/2020)**

**74. பதிவு செய்யப்பட்டது.**

24. கொரோனா வைரஸ் நோய் பரவியுள்ளதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்களின் அறிவுரையின் படி பொது மக்கள் அதிகம் கூடும் அலுவலகங்கள் மற்றும் மாநகராட்சி பிரிவு அலுவலகங்களில் கொரோனா வைரஸ் பரவாமல் இருக்க சோப்பு போட்டு கை கழுவும் முறையை வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே மண்டலம்-3க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் கூடும் இடங்களில் கைகளை அலம்புவதற்கு ஏதுவாக (SS Sink) பொருத்த வேண்டியுள்ளது:

1. பொதுசுகாதார பிரிவு வார்டு அலுவலகம் (முத்தம்பாளையம்) வீட்டு வசதி வாரியம் பகுதி-II
2. பொதுசுகாதார பிரிவு வார்டு அலுவலகம் (திண்டல்)
3. பொதுசுகாதார பிரிவு வார்டு அலுவலகம் (அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி காந்திஜி ரோடு)
4. மண்டலம்-3 அலுவலகம்
5. மாவட்ட ஆட்சியரக வளாக முன்புறம் பொருத்த உத்தேசிக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட இடங்களில் SS Sink வாங்கி பொருத்தவும் அதற்கான தண்ணீர் வசதிகள் செய்ய வேண்டியுள்ளது. மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.2,19,029/-ஐ திரு. K.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ2/1840/2020)**

**75. பதிவு செய்யப்பட்டது.**

25. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-3க்குட்பட்ட வார்டு 39-ல் சூரம்பட்டி அம்மா உணவகம் செயல்பட்டு வருகிறது. தற்போது நாடு முழுவதும் கொரோனா நோய் பரவியுள்ளதை தொடர்ந்து பாரத பிரதமர் அவர்களின் உத்திரவின் படி குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973 பிரிவு 144-ன் கீழ் தடை உத்திரவு அமலில் உள்ளது. எனவே மேற்கண்ட அம்மா உணவகத்தில் பொது மக்களின் நலன் கருதி காலை, மதியம் மற்றும் இரவு நேரங்களில் உணவு தயாரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு வரும் உணவை விட கூடுதலாக உணவுகள் வழங்கப்பட்டு வருவதுடன் அதிகப்படியான உணவு பொது மக்களுக்கு வழங்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது. எனவே கூடுதலான உணவுகள் தயாரிக்க சில்வர், அலுமினிய பாத்திரங்கள் வாங்க வேண்டியுள்ளது. அது மட்டுமின்றி ஏற்கனவே உள்ள அடுப்பு போன்ற பொருட்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வேண்டியுள்ளது. சமீபத்தில் பெய்த கன மழையில் இடி தாக்கி மின் ஒயரிங் அனைத்தும் பழுதடைந்து மின் தடை ஏற்பட்டது. இதனால் ஒயரிங் பணிகள் மற்றும் எர்த் அமைக்க வேண்டியுள்ளது. மேலும் கூடுதலாக மின் விசிறிகள் மற்றும் மின் விளக்குகள் பொருத்த உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணி கொரோனா வைரஸ் தடுப்பு பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல்

தொகை ரூ.3,17,172/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1962/2020–1)**

**76. பதிவு செய்யப்பட்டது.**

26. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-2க்குட்பட்ட பெரிய சேமூர் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்து செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட பெரிய சேமூர் தலைமை நீரேற்று நிலையத்தில் 75 HP HSC Clear water Pump (Unit-2) –ல் பழுது ஏற்பட்டு இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலை ஏற்பட்டது. எனவே 75 HP HSC Clear water Pump (Unit-2) பழுதுகளை சரி செய் உத்தேசிக்கப்பட்டது.

மேற்படி பணியை குடிநீர் பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.69,597/-ஐ திரு. K. நந்தகுமார், ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ2/2006/2020–4)**

**77. பதிவு செய்யப்பட்டது.**

27. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-2க்குட்பட்ட நேதாஜி தினசரி பெரிய மார்க்கெட்டில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்திற்கு இடம் மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டு அதன் அடிப்படையில் காய்கறி மற்றும் பழக்கடைற்கு இடவசதி செய்தல், சமூக இடைவெளி பராமரிக்கும் வகையில் 1 மீ இடைவெளியில் நிற்கும் வகையில் 1 மீ வட்டமுள்ள வட்ட வடிவிலான கோடுகள் அமைத்தல் மற்றும் வண்டி வாகனங்கள் தனித்தனியாக செல்லும் வகையில் இரும்பு கம்பி தடுப்புகள் ஆகிய வசதிகளை வாடகை அடிப்படையில் செய்து கொடுத்தல் பணியினை மேற்கொள்ள ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15 நாள். 23.03.2020–ல் அனுமதியின் பேரில் உள்ளூர் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்தால் அதனை ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.302534/-ஐ திரு. என்.ஆறுமுகம், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/143/2020)**

**78. பதிவு செய்யப்பட்டது.**

28. ஈரோடு மாநகராட்சி- மண்டலம்-1க்குட்பட்ட வார்டு எண்.5,6,7 பி.பெ.அக்ரகாரம் பகுதியில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டதை தொடர்ந்து தனிமைபடுத்தப்பட்ட பகுதியில் உள்ள வீதிகளில் சவுக்கு கட்டைகள் வைத்து தடுப்புகள் அமைக்கவும் மற்றும் காவலர்களுக்கு 3 இடங்களில் தற்காலிகமாக சாமியானா (நிழற்குடை) அமைக்கும் பணிக்கு, உத்தேச செலவினத் தொகை ரூ.55,000/—க்கு ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணியினை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு 15 –ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.T. விஜயகுமார், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.55000/-ஐ திரு.T. விஜயகுமார், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

பார்வையிட்டு பதிவு செய்யலாம் . **(இ1/619/2020)**

**79. பதிவு செய்யப்பட்டது.**

29. ஈரோடு மாநகராட்சி - கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகளுக்கு தேவைப்படும் Petrol engine with portable power sprayer set 5 எண்ணிக்கைகளை விநியோகம் செய்து தீயணைப்பு துறை jetting வாகனம் உள்ளிட்ட வாகனங்களில் பொருத்துதல் மற்றும் BHEL Mist spray இயந்திரத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல் பணிகளை ரூ.3.00 இலட்சம் உத்தேச செலவில் மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s.K.N.Prasanna, Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியினை மேற்கொண்டு பட்டியல் தொகை ரூ.2,97,965/-ஐ வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1950-3/2020)**

**80. பதிவு செய்யப்பட்டது.**

30. ஈரோடு மாநகராட்சியில் கொரானா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணியில் தற்போது மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் கிருமி நாசினியாக சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் வாகனங்களின் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. கொரானா வைரஸ் நோய் பரவல் தடுப்பு பணிகளுக்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசலினை இருப்பில் வைக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய மெசர்ஸ்.சதர்ன் கெமிக்கல்ஸ், ஈரோடு

அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்டவாறு 1,13,720 கிலோ சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் இரண்டு கட்டமாக வாங்கப்பட்டு அதற்கான மொத்த தொகை ரூ.11,31,515/-ஐ மெசர்ஸ்.சதர்ன் கெமிக்கல்ஸ், ஈரோடு நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1863-1/2020)**

**81. பதிவு செய்யப்பட்டது.**

31. ஈரோடு மாநகராட்சி - கொரோனா வைரஸ் தடுப்பு பணிக்காக மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வாயிலாக வழங்கப்பட்டுள்ள BHEL Mist கிருமி நாசினி தெளிப்பு இயந்திரத்தை பயன்படுத்த வாடகை அடிப்படையில் ஜெனரேட்டருடன் லாரியில் பொருத்தி ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கும் பணியினை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனவே கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணியின் அவசர அவசியத்தினை கருதி வாகனம் மற்றும் ஜெனரேட்டர் ஆகியவற்றை வாடகை அடிப்படையில் வழங்கி பணியாளர்களை நியமித்து மேற்கண்ட BHEL Mist இயந்திரம் மூலம் கிருமி நாசினி தெளிக்கும் பணியினை மாநகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. K.N.பிரசன்னா, ஒப்பந்ததாரர், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணியை செய்து முடிக்கப்பட்டு அதற்கான மொத்தப் பட்டியல் தொகை ரூ.7,01,993/-ஐ வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : -**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1910/2020)**

**82. பதிவு செய்யப்பட்டது.**

32. ஈரோடு மாநகராட்சியில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. பார்வையில் கண்டுள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதத்தில் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறையின் வழிகாட்டு நெறிமுறையில், கோவிட்-19 நோய் தொற்று ஏற்படும் நேரத்தில் குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதரப்பணிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் குடிநீர் விநியோகத்தில் குடிநீரின் குளோரின் அளவு குறைந்தபட்சம் 0.50 மி.கி./லி. என்ற அளவில் பராமரிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க ஈரோடு மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 9 எண்ணிக்கை நீரேற்று நிலையங்களில் குடிநீரில் கூடுதலாக குளோரின் கலக்க எதிர்வரும் 2 மாதங்களுக்கு தேவைப்படும் 30 எண்ணிக்கை திரவ குளோரின் சிலிண்டர்களை ரூ.4.70 இலட்சம் உத்சேசெலவில் வாங்கி பயன்படுத்த பணியின் அவசியம் கருதி மாநகராட்சிகளின் சட்டம் பிரிவு 15-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய M/s.Sivaalik Rathinam Chemicals, Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி குளோரின் சிலிண்டர்களை பெறப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.4,67,100/-ஐ வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(இ1/1950-2/2020)**

**83.	பதிவு செய்யப்பட்டது.**

33. ஈரோடு மாநகராட்சியில் கொரானா வைரஸ் நோய் தடுப்பு பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணியில் தற்போது மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருக்களில் கிருமி நாசினியாக சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் வாகனங்களின் மூலம் தெளிக்கப்பட்டு வருகிறது. கொரானா வைரஸ் நோய் பரவல் தடுப்பு பணிகளுக்கு தேவையான சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசலினை இருப்பில் வைக்க நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. எனவே பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு-15-ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய Thiru.K.Nandakumar, Erode அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்கண்டவாறு 45,300 கிலோ சோடியம் ஹைப்போ குளோரைட் கரைசல் வாங்கப்பட்டு அதற்கான தொகை ரூ.4,50,536/-ஐ Thiru.K.Nandakumar, Erode நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.	**(இ1/1863-2/2020)**

**84.	பதிவு செய்யப்பட்டது.**

34. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட மத்திய பேருந்து நிலையத்தில் தொற்று பரவுவதை தடுக்கும் வகையில் அங்குவரும் பொதுமக்கள் கைகளை சுத்தப்படுத்திக் கொள்ள 5 இடங்களில் எவர்சில்வர் அமைப்பிலான கைகழுவும் அமைப்பு வாடகை அடிப்படையில் உபயோகப்படுத்தவும் மற்றும் பொதுமக்கள் காய்கறிகளை வாங்க ஒரே இடத்தில் கூடுவதை தவிர்க்க 4 சக்கர நடமாடும் காய்கறிக்கடைகள் ஏற்படுத்தி அந்தந்த குடியிருப்புப்பகுதிகளில் விற்பனை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த நடமாடும் காய்கறிக்கடைகளை பொதுமக்கள் எளிதாக அடையாளம் காணும் வகையில் வண்டி வாகனம் முன்புறம் 6x4 அடி என்ற அளவில் FLEX பேனர் கட்டவும் மற்றும் இம்மாநகராட்சி மைய அலுவலகத்தில் பொதுமக்கள் அதிகம் வருவதாலும், தற்போது கோடைகாலமாக உள்ளதால் வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதனால் அலுவலக நுழைவு வாயிலின் அருகில் தற்காலிக நிழல் குடை (சாமியாணா) 24x18 என்ற அளவில் அமைக்கவும், இங்கு வரும் பொதுமக்கள் கைகளை சுத்தபடுத்திக்கொள்ள எவர்சில்வர் அமைப்பிலான கைகழுவும் அமைப்பு ஆகிய வசதிகளை வாடகை அடிப்படையில் செய்து கொடுக்க வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு உள்ளூர் அதற்கு உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு.என். ஆறுமுகம், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி ஏற்று மேற்படி பணி செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ.325248/-ஐ திரு.என். ஆறுமுகம், ஈரோடு அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.	**(இ1/0142/2020)**

**85.	பதிவு செய்யப்பட்டது.**